**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1**

**நீதிமன்றம், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.**

முன்னிலை : திரு. R. அருண்பாண்டியன், B.A.,B.L.,(Hons), M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் எண்.1,
கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ஆம் நாள் புதன்கிழமை

**இடைக்கால மனு எண்.326/2016**

**in**

**அசல் வழக்கு எண்.81/2016**

1. மலர்கொடி .... மனுதாரர் / வாதி

/ எதிர்/

1.ஜஸ்டின் பிரகாஷ்
2.ஆணையாளர், கொடைக்கானல் நகராட்சி.
... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இந்த இடைக்கால மனு என் முன் கடந்த 20.08.2025 தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ராமசந்திரன் அவர்கள் ஆஜராகியும், 1–வது எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.தங்கமணி அவர்கள் ஆஜராகியும், 2–வது எதிர்மனுதாரர் / பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் ஆஜராகியும், வழக்குரை, எதிரூரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. தாவா சொத்தில் மனுதாரரின் மனுதாரர் தாவா சொத்தில் தடுப்பு சுவர் கட்டுமானங்கள் செய்யும் போது பிரதிவாதிகளோ அவர்கள் வகையாட்களோ, ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் நிறுத்தக்கூடாது என அசல் வழக்கு முடியும் ஓர்

இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி இந்த இடைக்கால மனுவானது கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் சி,பி.சின் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–

2.1 இவ்வழக்கு சொத்தானது டி.எஸ்.எண்.67 ல் உள்ள தடுப்பு சுவர் என்றும், தாவா சொத்தானது 6 சென்ட் நிலம் என்றும் ஆதியில் அரசு புறம்போக்கு நிலம் என்றும் அதனை ஜெயசிங் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து அதனை சீர் செய்து விளைநிலமாக மாற்றி சுமார் 30 வருடத்திற்கு மேலாக அனுபவம் செய்ததோடு அரசுக்கு செலுத்தி வேண்டிய வரிவகையறாக்களை செலுத்தி வந்ததாகவும், எனவே வருவாய்துறை அதிகாரிகள் அவரது பெயருக்கு பிமெமோ வழங்கியுள்ளார்கள் என்றும், மேற்படி ஜெயசிங் என்பவரால் தாவா சொத்தினை சரிவர பராமரிப்பு செய்ய முடியாத காரணத்தினால் சேகர் என்பவருக்கு அனுபவமாற்று பத்திரத்தின் மூலம் மாற்றம் செய்ததாகவும், பின்னர் தாவா சொத்தினை மேற்படி சேகர் என்பவர் மனுதாருக்கு 1994 வருடம் மாற்றம் செய்ததாகவும், அதன்பின் மனுதாரரும் பலரும் அறியும் வண்ணம் அனுபவம் செய்ததோடு அதில் குடியிருப்பு கட்டி குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு அரசுக்கு செலுத்தி வேண்டிய வரிவகையறாக்களை செலுத்தி வந்ததாகவும், பின்னர் கடந்த 2009 ம் வருடம் தாவா சொத்தினை பொறுத்து 1–வது பிரதிவாதி இடையூறு செய்ததாகவும் இதனால் அவர் அசல் வழக்கு எண்.177/2009 ஆனது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது நிலுவையில் இருந்துவருவதாகவும், இந்நிலையில் தாவா சொத்தானது ஆற்றங்கரை அருகில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளித்தினாலும், மண் அரிப்பினாலும், மனுதாரர் குடியிருக்கும் தாவா சொத்திற்கு சேதம் ஏற்பட்டு வருவதாகவும் எனவே தாவா சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு தடுப்பு சுவர் கட்டுவதற்காக 2 ம் எதிர்மனுதாரரிடம் அனுமதியின் பேரில் தாவா சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு மனுதாரர் தனது சொந்த செலவில் தடுப்பு சுவர் கட்ட தொடங்கி அதில் பெரும்பாலான பகுதி முடிவடைந்ததாகவும், இந்நிலையில் தாவா சொத்திற்கு அருகில் பள்ளி நடத்தி வரும்

இவ்வழக்கின் 1–வது எதிர்மனுதாரர் மனுதாரரின் அனுபவத்திற்கு பல்வேறு இடையூறு ஏற்படுத்தியதோடு 2–வது எதிர்மனுதாரரின் உதவியோடு தாவா சொத்தில் கட்டப்பட்டு வரும் தடுப்பு சுவரை நிறுத்த பல்வேறு பணிகளை ஏற்படுத்துவதாகவும், மேலும கடந்த 22.10.2016–ம் தேதியன்று மனுதாரரின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததாகவும் எனவே எனவே மனுதாரரின் அனுபவத்தில் உள்ள மனுச்சொத்துகளில் எதிர்மனுதாரரோகளோ, அவர் வகையாட்களோ, ஏஜெண்டுகளோ, எவ்வித இடைஞ்சலோ, தடையோ செய்யக்கூடாதென்று இவ்வழக்கு முடியும் ஒர் இடைக்கால தடையுறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1–ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்ரையை இம்மனுவில் எதிரூரையாக எடுத்துக்கொள்ள 1–ம் மனுதாரர் தரப்பில் மெமோவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரரால் தழுவப்பட்ட எதிரூரையின் சுருக்கம்.**

மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ள சங்கதிளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் தாவா சொத்தான டி.எஸ்.எண்.67 ல் மொத்த எத்தனை செண்டு உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், இந்நிலையில் தாவா சொத்தினை ஆக்கிரமிப்பு செய்த ஜெய்சிங் என்பவர் கொடைக்கானல் நகராட்சியில் பணிபுரிந்தவர் என்றும் மேலும், தாவா சொத்தானது ஜெய்சிங் என்பவரின் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றும், டி.எஸ்.எண்.67 தெற்கு பக்கம் பொது ஓடை உள்ளது என்றும் மேற்படி ஓடையாது பாக்கியாபுரம் மற்றும் நாயுடுபுரம் பொதுமக்களுக்கு குடிநீர் ஆதாரமாக உள்ளது என்றும் மேலும் தாவா சொத்தின் தெற்கு பக்கம் உள்ள ஓடையை மறித்து மனுதாரரின் கணவர் எவ்வித அனுமதியின்றி கட்டிடம் கட்டி வந்ததார் என்றும் எனவே மனுதாரரின் கணவர் மீது பழனி சப் கோர்ட்டில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அதில் இடைக்கால மனுவில் தடை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரரின் கணவர் மனுதாரரை தூண்டுவிட்டு தாவா சொத்தில் ஓடையை மறித்து தாங்கு சுவர் கட்டுவதற்காக எதிர்மனுதாரரின் மீது பொய்யான காரணங்களை இந்நீதிமன்றத்தில் இந்த அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு தாக்கல் செய்த பின்னர் தாவா சொத்தில் எதிர்மனுதாரர் ஓடையை

கட்டியுள்ளார் என்றும் மேற்படி தடுப்புசுவரினால் எதிர்மனுதாரர் கட்டிவரும் பள்ளிக்குள் தண்ணீர் புகுந்து குழந்தைகள் பள்ளிக்குள் நுழைய முடியாது சூழ்நிலையில் உள்ளததாகவும் மேலும், மனுதாரர் கட்டியுள்ள கட்டித்தின் மேற்கூரையில் இருந்து தண்ணீர் ஆனது பள்ளிக்குள் விழுந்து நீர் தேங்கும் சூழ்நிலை உள்ளதாகவும் மேலும் எதிர்மனுதாரர் கடந்த 14.09.2016–ம் தேதி பொது தகவல் வழங்கும் அலுவலர் கொடைக்கானல் நகராட்சி அலுவலரிடம் மேற்படி தாவா சொத்தில் R.C.C தாங்கு சுவர் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளதா, அதற்கான நிதி எவ்வளவு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதா, என பல கேள்விகள் கேட்கப்பட்டதாகவும் அதில் தாவா சொத்துக்கு கட்டிட அனுமதி வரைபடம் எதுவும் வழங்கப்படவில்லை என்றும், நகராட்சியில் இருந்து தாங்கு சுவர் எதுவும் கட்டப்படவில்லை என்றும், மேற்படி இடத்தில் கட்டிடம் கட்ட நகராட்சியால் எவ்வித அனுமதியும் பெறப்படவில்லை என்றும் தகவல் பெறப்பட்டதாகவும் ஆனால் மனுதாரரோ தனது மனுவில் தாவா சொத்தில் R.C.C சுவர் எழுப்ப அனுமதி வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக கூறியுள்ளார் எனவே மனுதாரரும், 2–வது எதிர்மனுதாரரும் சேர்ந்து அரசாங்க பணத்தை சுமார் ரூ10,00,000/– வரை டெண்டர்விட்டதாகச் சொல்லி Collued ஆக மேற்படி பணியை செய்துள்ளதாகவும், மேலும், 2–வது எதிர்மனுதாரர் மாவட்ட ஆட்சியரின் கீழ் இயங்குபவர் என்பவதால் மாவட்ட ஆட்சியரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும் எனவே இவ்வழக்கானது Non Jointer Necessary Party என்ற தோஷத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தாவா சொத்து விபரம் தவறு என்றம், தாவா சொத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களும் இந்த வழக்கிற்கு சம்மந்தமானது இல்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிரூரை தாக்கல் செய்துள்ளார்.

4. **2–ம் எதிர்மனுதாரரால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்ரையை இம்மனுவில் எதிரூரையாக எடுத்துக்கொள்ள 2–ம் மனுதாரர் தரப்பில் மெமோவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1–ம் எதிர்மனுதாரரால் தழுவப்பட்ட எதிரூரையின் சுருக்கம்.**

தாவா சொத்தில் தடுப்புசுவர் கட்டுவதற்காக 2–ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் 2015–2016 நகர்மன்ற தீர்மானம் எண்.1343 நாள் 28.05.2015–ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்படி தடுப்புசுவர் கட்டப்பட்டதாகவும், பின்னர் 2–ம் மனுதாரரின் அலுவலகத்தொல் கடந்த 16.09.2016–ம் தேதியன்று ந.க.எண்.5366/2016/இ1ன் கோப்புப் படி நகர்மன்ற தீர்மானம் எண்.1540 நாள் 25.02.2016ன் படி 2–ம் எதிர்மனுதாரரால் 2015–2016–ன் கீழ் நாயுடுபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நிர்வாக நலன் கருன் ரத்து செய்வதாகஉத்திரவிடப்பட்டதாகவும் தற்போது மேற்படி இடத்தில் தடுப்புச்சுவர் எதும் கட்டப்படவில்லை என்றும் தடுப்பு சுவர் கட்டிவருவதை தடுப்பதற்கு 1–ம் மனுதாரருக்கு 2–ம் மனுதாரர் உதவி செய்து வருவதாக மனுவில் கூறியுள்ளதை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர் தனது இடத்தில் தனிப்பட்ட முறையில் தடுப்பு சுவர் அமைப்பதற்கு மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், வழக்கு சரியான முறையில் மதிப்பிடப்படவில்லை என்றும் உரிய நீதிமன்றக் கட்டணமும் செலுத்தப்படவில்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிரூரையை தாக்கல் செய்துள்ளார்.

5. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**6. தீர்வு:–**

6.1. அசல் வழக்கானது மனுதாரர் தாவா சொத்தில் தடுப்பு சுவர் கட்டுமானங்கள் செய்யும் போது பிரதிவாதிகளோ அவர்கள் வகையாட்களோ, ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் நிறுத்தக்கூடாது என்று ஓர் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற் சொன்ன பரிகாரத்தை இந்த இடைக்கால மனுவிலும் கோரியுள்ளார்.

6.2. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தாவா சொத்தில் மனுதாரர் வீடு கட்டியுள்ளதாகவும், மேற்படி வீடானது ஆற்றங்கரை பக்கத்தில் உள்ளதாகவும் எனவே

மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளம் மற்றும் மண் அரிப்பு போன்ற காரணங்களால் மனுதாரர் குடியிருக்கு வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுவதாகவும், எனவே ஆற்றங்கரை பகுதியில் தடுப்பு சுவர் அமைப்பதற்காக மனுதாரர் 2–ம் எதிர்மனுதாரரிடம் அனுமதி பெற்ற மனுதாரர் தனது சொந்த செலவில் தடுப்புசுவர் கட்டிவருவதாகவும் அதற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்து வருவதாகவும் எனவே இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனுதாரர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6.3 1 எதிர்மனுதாரரர் தரப்பு வழக்கறிஞர் தாவா சொத்தான அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் மனுதாரர் கட்டுப்பட்டு வரும் தடுப்பு சுவரினால் பொது மக்களுக்கு தண்ணீர் பாதிப்பு ஏற்படும் என்றும் மேற்படி தடுப்பு சுவர் கட்டுவதற்கு எவ்வித அனுமதியும் பெறவில்லை என்றும் மேலும் 2–ம் எதிர்மனுதாரரும் எதிரூரையில் மேற்படி இடத்தில் தடுப்பு சுவர் எதுவும் கட்டவில்லை என்றும் என்றும் தாவா சொத்தில் தடுப்பு சுவர் அமைப்பதற்கு மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று 1–ம் எதிர்மனுதாரரின் எதிரூரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பிலோ தாவா சொத்தில் தடுப்பு சுவர் அமைக்க போடப்பட்ட உத்தரவானது ரத்து செய்யப்பட்டுவிட்டதாகவும், எனவே தாவா சொத்தில் தடுப்பு சுவர் அமைப்பதற்கு மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று 2–ம் எதிர்மனுதாரரின் எதிரூரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

6.4. இம்மனுவினை பரிசீலனை செய்கையில் அசல் வழக்கான O.S.No. 81/2016 வழக்கில் கோரியுள்ள தாவா சொத்தில் மனுதாரர் அமைக்கு தடுப்பு சுவரினை பிரதிவாதிகளோ அவர்கள் வகையாட்களோ, ஏஜெண்டுகளோ எந்தவித தடையும், செய்யக்கூடாது என்று ஓர் நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்தையே இந்த இடைக்கால மனுவிலும் கோரப்பட்டுள்ளது என்பதனை அறிய முடிகிறது. இந்நிலையில் அசல் வழக்கின் பொருண்மை குறித்தும், வழக்கின் முகாந்திரம் குறித்தும் அசல் வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்யும்போதும், சான்றாவணங்கள்

தாக்கல் செய்யப்பட்டு பரிசீலனை செய்யும் போது தான் முடிவுக்கு வர இயலுமே தவிர முதல்நிலையிலேயே முடிவுக்கு வர இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.5 தாவா சொத்தானது 6 சென்ட் நிலமானதில் மனுதாரர் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், மேலும் தாவா சொத்தானது ஆற்றங்கரை அருகில் அமைந்துள்ளதால் மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளித்தினாலும், மண் அரிப்பினாலும், மனுதாரர் குடியிருக்கும் தாவா சொத்திற்கு சேதம் ஏற்பட்டு வருவதாகவும் தாவா சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு மனுதாரர் தனது சொந்த செலவில் தடுப்பு சுவர் கட்ட தொடங்கி பெரும்பாலான பணிகள் முடிவடைந்ததாக குறிப்பிட்டுள்ளார். 1–வது எதிர்மனுதாரர் தரப்பிலோ மேற்படி தடுப்பு சுவர் கட்டுவதால் பாக்கியபுரம் மற்றும் நாயுடுபுரம் மக்களுக்கு குடிநீர் தட்டுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதாகவும், மேற்படி தடுப்பு சுவர் எழுப்பியதால் எதிர்மனுதாரர் நடத்திவரும் பள்ளிக்குள் நீர் புகுந்து குழந்தைகள் பள்ளிக்குள் செல்ல முடியாது சூழ்நிலை உள்ளதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி இருதரப்பினர்கள் தரப்பிலும் முன்வைக்கப்பட்ட வழக்கின் சங்கதிகளை பொறுத்து அசல் வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்யும் போதும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும் போதும் தான் முடிவுக்கு வர இயலுமே தவிர முதல்நிலையிலே முடிவுக்கு வர இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.6) இம்மனுவும், அசல் வழக்கும் தாவா சொத்தில் மனுதாரர் கட்டும் கட்டுமானத்திற்கு எதிர்மனுதாரர்கள் எவ்வித தடையும் செய்யக்கூடாது என்று மனுதாரர் தரப்பில் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் தரப்பிலோ மனுதாரர் 2–ம் எதிர்மனுதாரரின் அனுமதி பெற்று தாவா சொத்தில் தடுப்பு சுவர் கட்டிவருவதாக தனது மனுவில் கூறியுள்ளார். 1–ம் எதிர்மனுதாரர் தரப்பிலோ மேற்படி தடுப்பு சுவர் கட்டுவதற்கு உரிய அனுமதியானது பெறவில்லை என்றும் தனது எதிருரையில் கூறியுள்ளார். 2–ம் எதிர்மனுதாரர் தரப்பிலோ தடுப்புசுவர் கட்டுவதற்காக 2015–2016 நகர்மன்ற தீர்மானம் எண்.1343 நாள் 28.05.2015–ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மேற்படி தடுப்புசுவர் கட்டப்பட்டதாகவும் பின்னர் கடந்த

16.09.2016–ம் தேதியன்று ந.க.எண்.5366/2016/இ1ன் கோப்புப் படி நகர்மன்ற தீர்மானம் எண்.1540 நாள் 25.02.2016ன் படி 2–ம் எதிர்மனுதாரரால் 2015–2016–ன் கீழ் நாயுடுபுரம் பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிரத்து செய்வதாக உத்திரவிடப்பட்டதாகவும் தற்போது மேற்படி இடத்தில் தடுப்புச்சுவர் எதும் கட்டப்படவில்லை என்றும் தனது எதிருரையில் குறிப்பிட்டுள்ளார். எனவே தாவா சொத்தில் ஏதேனும் கட்டுமானங்கள் உள்ளதா? அவ்வாறு இருப்பின் அது அனுமதி பெற்று தான் கட்டுப்பட்டுள்தா? அதனால் பொதுமக்களுக்கோ அல்லது எதிர்மனுதாரருக்கோ ஏதேனும் பாதிப்பு ஏதுவும் ஏற்பட வாய்ப்பு உள்ளதா போன்ற சங்கதிகளானது. இரு தரப்பினரின் மெய்பிக்கும் சுமையை பொறுத்த தீர்வுகள் ஆகும். மேற்சொன்ன பொருண்மைகள் குறித்து இந்த இடைக்கால மனுவில் தீர்மாணிக்கும் பட்சத்தில் அது வழக்கினுள் சிறு அளவிலான மற்றொரு வழக்கை நடத்துவதற்கு ஈடாகிவிடும். அது ஒரு பொருள் தொடர்பான பல்வழக்குகளை உருவாக்க வழிவகுக்கும் ( Multiplicity of proceedings ).

6.7 மனுதாரர் தரப்பில் தாவா சொத்தானது உரிய ஆவணங்களின் மூலம் தான் மாற்றாக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரரும் தாவா சொத்திற்கு அரசுக்கு செலுத்த வேண்டிய வரிவகையறாக்களை செலுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பிலோ தாவா சொத்திற்கு மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் தாவா சொத்தினை பொறுத்து கொடைக்கானல் நகராட்சியில் பணிபுரிந்த நபரே தனது பெயருக்கு ஆவணங்களை தயார் செய்துள்ளதாகவும் எனவே அவர் மூலம் தாவா சொத்தினை பொறுத்து நடைபெற்ற அனுபவம் மாற்றங்கள் ஏற்புடையது அல்ல என்றும் அசல் வழக்கில் உரிய தரப்பினரை சேர்க்கவில்லை என்றும், குறிப்பிட்டுள்ளார். 2–ம் மனுதாரர் தரப்பிலும் தாவா சொத்திற்கு சரியான மதிப்பீடு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே இருதரப்பிலும் முன்வைக்கப்பட்ட சங்கதிகளின் உண்மைதன்மை கண்டறிய வழக்கின் பொருண்மைகளின் ஆழமான பரிசீலனையும் சான்றுகளின் மதிப்பீட்டின் தேவையை உண்டாக்கின்றது. இத்தகையை கூற்றுகள் இடைக்கால மனுவில் அத்தியாவசிய

அடிப்படை உட்கூறுகளாக விளங்கும் " முதற்பரர்வையிலான வழக்கு" (Prima facie case) என்ற கருத்தை நீக்ககூடியவையாக உள்ளது.

6.8) இந்நிலையில் இந்த மனுவில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள நிலையில் இம்மனுவானது மனுதாரருக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டு, ஒருவேளை அசல் வழக்கானது பிரதிவாதி தரப்பிற்கு ஆதரவாக முடியும் போது. பிரதிவாதிக்கு ஏற்படும் பாதிப்பானது வாதியின் பாதிப்பைவிட மேலொங்கி இருக்கு.

6.9) மேலும், அசல் வழக்கானது 2016 முதல் நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் அசல்வழக்கில் ஆவணங்களை பரிசீலனை செய்கையில் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கானது எழுவினாக்கள் வனைவதற்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரருக்கு ஆதரவாக இம்மனுவானது தீர்மானிக்கப்படும் பட்சத்தில், அது அசல் வழக்கை காலதாமதம்படுத்தும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, அசல் வழக்கில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், மனுதாரர் கோரியுள்ள பரிகாரமானது அசல் வழக்கில் விசாணையின் போது தான் தீர்மானிக்க முடியும் என்பதாலும், இம்மனுவை தள்ளுபடி செய்வதே நீதியின் பால் உகந்தது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் அலுவலக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 22.10.2025 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.10.22 18:55:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.

1. மனுதாரர்கள் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை

2. எதிர்மனுதாரர்கள் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:— இல்லை

3. நீதிமன்ற சான்றவாணங்கள்:— இல்லை

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.10.22 18:55:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1.

கொடைக்கானல்.